அ.வ.எண். 48/2014
நாள்.05/07/2019
<u>பெயர்-அம்மணியம்மாள். க.பெ.காளி (எ) நல்லமுத்து</u>
<u>வாதி தரப்பு 1ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>
<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை நானும் என் பாவாயி அம்மாள் லதா ஆகிய முவரும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். யார் மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் தீர்ததம்மாள் மற்றும் 3 பேர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். அந்த 3 நபர்கள் லட்சுமணன் மாரியப்பன் ஜெயராமன் ஆகியோர். வேறு யார் பெயரிலும் நான் வழக்கு போடவில்லை. தாவா ச.எண்.117 ஆகும். 15 சென்ட்டுக்கு போட்டுள்ளேன். 15 சென்ட் நிலம் எனக்கும் பாவாயிம்மாள் லதா ஆகிய மூவருக்கும் பாத்தியம. தாவா சொத்து வேறு யார் பெயரிலும் இல்லை. தாவா சொத்தின் செக்குபந்தி என் நிலம் மேற்கு புறம் லட்சுமணன் நிலம் உள்ளது, வடக்கில் மாரியப்பன் நிலம், தென்புறம் தீர்த்தம்மாள் நிலம், கிழக்கில் லட்சுமணன் நிலம் உள்ளது. தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் சுமார் 12 வருடத்திற்கு முன்பே நாங்கள் விலைக்கு வாங்கினோம். யாரிடம் இருந்து வாங்கினோம் என்றால் தீர்த்தகிரி என்பவரிடமிருந்து வாங்கினோம். அதற்காக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் புறம்போக்காக இருந்து நாங்கள் சீர்திருத்தம் செய்ததால் பட்டா பெற்றுள்ளோம்.

கு.வி. வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.